கவனிக்க .- 2026.02.06 ஆந் திகதிய 2475ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2476 - 2026 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2026.02.13

2476ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 22 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, மாச்சு மாதம் 06ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, பெப்புருவரி மாதம் 20ஆந் திகதிநண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர் .

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

21- B 82763 - 403 (2026/02)

# நானாவித அறிவித்தல்கள்

## பாராளுமன்றம்

### இன்டர்நஷனல் ஹியூமன் வொச் பவுண்டேஷன் - இன்டர்நஷனல் ஓகனைசேஷன் ஒப் டெவலப்மன்ற் அமைப்பை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ரிஷாத் பதியுதீன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் " இன்டர்நஷனல் ஹியூமன் வொச் பவுண்டேஷன் - இன்டர்நஷனல் ஓகனைசேஷன் ஒப் டெவலப்மன்ற் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" என அழைக்கப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த அமைப்பை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. ஏழை மற்றும் ஆதரவற்ற குழந்தைகளின் மொழிக் கல்வியை மேம்படுத்த உதவுதல்; மனித உரிமைகள் கண்காணிப்பு தொடர்பான சிவில் சட்டத்தில் ஆன்லைன் டிப்புளோமா சான்றிதழ் பாடநெறிகள் நடாத்துதல்; சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு (SME)தொழில்துறை உற்பத்தி, வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு , மீன்வளம், தொழில்நுட்ப திறன்கள்/ கைத்தொழில் , தொழில்முனைவு ஆதரவு, உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான உற்பத்தி அல்லது தயாரிப்பு, ஏற்றுமதி நோக்கு நடவடிக்கைகள்; அடித்தள வசதிகள் (எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், சாலைகள், பாசனம், வடிகால், மின்சாரம், தொடர்பாடல்) மற்றும் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை உதவி நிதி ஆகியவற்றிற்கு ஆதரவு மற்றும் நிதி உதவி வழங்குதல்;

2. அமைதி மற்றும் நீதியின் மேம்பாட்டிற்கு உதவுதல்; இன ஒற்றுமை , மரபுகள் , சடங்குகள் மற்றும் சமூக ஒற்றுமையை ஊக்குவித்தல்;

3. மதங்களின் நம்பிக்கைகள், மரபுகள், சடங்குகள் மற்றும் நடைமுறைகளுக்கு பரஸ்பர மரியாதை மற்றும் மதிப்பை ஊக்குவித்தல் ;

பிறவும்,

ரிஷாத் பதியுதீன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்.

02-207